**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 96 /2019 DW1**

16.12.2025 **பி.வா.சா.1 செந்தில்குமார் சத்திய வாக்குமூலத்தின் பேரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

எங்கள் தரப்பில் தாக்கல் செய்த பதிலுரையில் மேற்படி கடை 3ம் பிரதிவாதியின் பராமரிப்பில் தான் கடை உள்ளது என கண்டுள்ளது என்றால் சரிதான். அந்த கடையில் இருந்து சட்டத்திற்கு புறம்பாக டியூப் லைட் போடுவதற்காக மின் ஒயரை கடையில் இருந்து வெளியே இழுத்து மின்சாரம் கொடுக்கப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 3ம் பிரதிவாதியின் நடவடிக்கை சட்ட விரோதம் என பதிலுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறந்து போன நபர் அவரது வாகனத்தை பின்பக்கமாக கவனக்குறைவாக டிவர்ஸில் எடுத்தார் என்றும், அப்போது மேற்படி ஒயரில் உரசி ஒயர் துண்டிக்கப்பட்டு இறந்தவர் ஓட்டிய வண்டியில் பட்டு மின்சாரம் பாய்ந்தது என்று பதிலுரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். கொஞ்சம் கவனம் செலுத்தியிருக்கும் பட்சத்தில் இறந்தவர் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்று பதிலுரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறந்தவருக்கு 07.09.1999 முதல் 06.09.2017 வரை வாகனத்தை ஓட்ட ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றும் அதற்கான சான்று பெற்றுள்ளார் என்றால் சரிதான். 01.06.2011ல் இறந்தவர் பெயருக்கு சாலை வரிவிதிப்பில் பெயர் மாற்றம் ஆகியுள்ளது என்றால் சரிதான். மாசுக்கட்டுப்பாடு துறையில் 05.08.2013ல் அவருக்கு சான்று வழங்கப்பட்டு அந்த சான்றின் படி 04.02.2014 வரை அமுலில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வாகனத்தின் பதிவுச் சான்று இறந்தவர் பெயருக்கு மாறியுள்ளது என்றால் சரிதான். காவேரியம்மாள் அல்லது 3ம் பிரதிவாதிக்கு எதிராகவோ இந்த விபத்திற்கு பிறகு வாதி கொடுத்த அறிவிப்பின் படி எங்கள் துறை சார்பில் நடவடிக்கை ஏதும் எடுத்தோமா என்றால் இல்லை. 3ம் பிரதிவாதி எங்கள் துறைக்கு தெரிந்தே தான் அவர் கடையில் இருந்து மின் இணைப்பை ஒயர் மூலம் வெளியில் கொண்டு சென்று டியூப் லைட்டிற்கு பயன்படுத்தியுள்ளார் என்றும் அதனால் தான் நாங்கள், எங்கள் துறை சார்பில் விபத்திற்கு முன்போ அல்லது பின்போ காவேரி மற்றும் 3ம் பிரதிவாதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. இறந்தவருக்கு மனைவி மற்றும் 2 பள்ளி செல்லும் பிள்ளைகள் மற்றும் வயதான பெற்றோர்கள் உள்ளதால் வாதி கேட்டுள்ள இழப்பீடு நியாயமானது என்றும், அதனை கொடுக்க எங்கள் நிர்வாகம் கடமை பட்டது என்றால் சரியல்ல. எங்கள் நிர்வாகத்தின் கவனக்குறைவால் தான் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றும், ஆகவே

விபத்திற்கு இழப்பீடு கொடுக்க எங்கள் நிர்வாகம் கடமை பட்டது என்றால் சரியல்ல. வாதி விபத்திற்கு பிறகு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நாங்கள் பதில் அறிவிப்பு கொடுத்தோமா என்றால் கொடுத்தோம், நாங்கள் எங்கள் துறை சார்பில் அப்படி ஒரு பதில் அறிவிப்பு கொடுக்கவேயில்லை என்றும், தற்போது வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி மற்றும் காவேரியம்மாள் ஆகியோர்களின் சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகளுக்கு நாங்கள் உடந்தையாக இருந்த காரணத்தால் மேற்படி விபத்திற்கு நாங்கள் இழப்பீடு கொடுக்க கடமை பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி விபத்து மின்சார வாரியத்தின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்பது நிருபிக்கும் பட்சத்தில் எங்களுடைய நிர்வாக வாரிய சுற்றறிக்கையின் படி ரூ. 5 லட்சம் வரை நாங்கள் கொடுக்க வேண்டும். நாங்கள் மேற்படி விபத்திற்கு அதிகமான இழப்பீடு கொடுக்க கடமைபட்டவர்கள் என்றும், வழக்கிற்காக குறைவாக இழப்பீடு கொடுக்க கடமைபட்டவர்கள் என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கேட்டுக் கொண்டபடி பிரதிவாதிகள் அனைவரும் கூட்டாகவும், தனித்தனியாகவும் இழப்பீடு கொடுக்க கடமை பட்டவர்கள் என்றால் சரியல்ல.

**<u>3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** - ஒத்திவைக்கப்படுகிறது.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.